**12.08.2025**

**அ.வ.எண். 5/2021**

**வா.சா.1 - ராஜேஸ்வரி, க/பெ. வேல்முருகன்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 11.08.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது சொத்தின் TOPO வரைபடத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. மேற்படி ஆவணத்தை தற்போது தாக்கல் செய்ய முடியுமா என்றால் கொண்டு வரவில்லை. எனது சொத்தின் புதிய சர்வே எண் 956/3, 4, 5 (பழைய சர்வே எண்.755/1) ஆகும். என்னிடம் காட்டப்படும் புல எண்.956 ன் TOPO வரைபடம் என்றால் ஆவணத்தில் 956 உள்ளது, ஆனால் அந்த ஆவணமா என்று தெரியாது. **புல எண்.956 ன் வரைபடம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. தாவா 1ம் அயிட்ட சொத்தில் கிழமேல் லிங்க்ஸ் அளவு 104 லிங்க்ஸ் அகலம் என சொல்லியுள்ளது சரியா தவறா என்றால் என்னுடைய சொத்து அதிகாமாக உள்ளது. கிழமேல் அளவு எவ்வளவு என்றால் 120 – 130 லிங்க்ஸ் வரும். எனது வழக்குரை சொத்து விவரத்தில் 1ம் அயிட்ட சொத்திற்கு கிழமேல் அளவு 104 லிங்க்ஸ் என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரிதான். சொத்து விவரத்தில் சொல்லியுள்ள அளவு தவறு என ஒப்புகொள்கிறேன் என்றால் அதிகமாக உள்ளது தான் எனக்கு தெரியும்.

3. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வேயர் வரைபடத்தில் கிழமேல் அயிட்டம் சொத்தில் 7 மீ(23.33 அடி) என்று குறிப்பிட்டுள்ளது சரியா என்றால் அளவு தவறு. தாவா 1ம் அயிட்ட சொத்தில் உள்ள அளவுகளுக்கும், நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வேயர் வரைபடத்தில் உள்ள அளவுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லாமல் உள்ளது என்றால் பிரதிவாதி 3 அடி தள்ளி வந்துள்ளதாக அறிக்கையில் சொல்லியுள்ளார் அது சரியானது. ஆணையர் அறிக்கையில் உள்ள அளவுகள் சரியானது என்றால் அந்த அளவு எனக்கு நினைவில்லை.

4. நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 1ம் அயிட்ட சொத்தில் கிழமேல் அளவு 7மீ என்று சொல்லியுள்ளது சரியானது என்றால் சரிதான். தென்வடல் அளவு 10 மீ என்று சொல்லியுள்ளது சரியா என்றால் தவறு. 44 அடி உள்ளது. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் காட்டப்படுவது 2 ம் அயிட்ட சொத்து என்றால் சரியல்ல, 3 ம் அயிட்ட சொத்து ஆகும். வழக்குரையில் 2 அயிட்ட சொத்திற்கு மட்டும் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் 3 அயிட்டங்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. 2 ம் அயிட்ட சொத்தில் புல எண்.956/5 ல் மேல்புறம் தென்வடல் 10 மீ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறான அளவாகும். புல எண்.956/5 ல் கிழபுறம் தென்வடல் அளவு 9.6 மீ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறானது. கிழமேல் அளவு 20.4 மீ என குறிப்பிடப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் எனக்கு மீட்டரில் தெரியாது, 100 - 120 அடி இருக்கும். லிங்க்ஸ் என்பது எவ்வளவு அளவு என்பது பற்றி எனக்கு தெரியாது. தாவா 2 ம் அயிட்ட சொத்தில் மொத்த சதுரடியாக 880 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சரியா அல்லது தவறா என்றால் நினைவில்லை.

6. வழக்குரையை காட்டி 2 ம் அயிட்ட சொத்து 880 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் நினைவில்லை. ஆணையர் அறிக்கையில் 956/5 காலையில், தாவா 2 ம் அயிட்ட சொத்தின் அளவுகள் கிழமேல் வடபுறம் 20.4 மீட்டராகவும், கிழமேல் தென்புறம் 20 மீட்டராகவும், தென்வடல் மேல்புறம் 10 மீட்டராகவும், தென்வடல் கிழபுறம் 9.6 மீட்டராகவும், மொத்தம் 2199 சதுரடி அல்லது 204.4 ச.மீ அளவுள்ளதாக சர்வேயரால் காட்டப்பட்டுள்ளதை நான் ஒப்புகொள்கிறேனா என்றால் இல்லை, இன்னும் அதிகமாக இருக்கும். சர்வேயர் தாக்கல் செய்துள்ள அளவுகள் தவறு என ஒப்புகொள்கிறேன் என்றால் சாட்சி மீண்டும் இல்லை, சரியாக தான் உள்ளது என்று சாட்சியம் அளிக்கிறார்.

7. நான் தாக்கல்செய்துள்ள வழக்குரையின் 2 ம் அயிட்ட சொத்துக்கும் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள அறிக்கைக்கும் சம்மந்தம் இல்லாமல் உள்ளது

என்றால் சரியல்ல. சர்வேயர் வரைபடத்தில் 956/3 காலையில் கிழமேல் வடபுறம் 28 மீ கிழமேல் தென்புறம் 27.4 மீ, தென்வடல் இருபுறம் 2 மீ, மொத்தம் 614.91 சதுரடி அல்லது 57 ச.மீ தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது எங்களது இடத்திற்குள் உள்ளது. வா.சா.ஆ.21 ல் 956/3 ஆனது 56 ச.மீ என குறிப்பிடப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் நினைவில்லை. புல வரைபடத்தில் புல எண்.956/3 என்பது பொதுப்பாதையாக உள்ளது என்றால் தவறு.

8. வழக்குரை 1 மற்றும் 2ம் அயிட்ட சொத்துக்கள், பி-அட்டவணையில் சொல்லியுள்ள சொத்து விவரங்களுக்கும், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் சர்வேயர் வரைபடத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள கிரய, மற்றும் தான செட்டில்மெண்ட் ஆகிய ஆவணங்களில் உள்ள அளவுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லாமல் உள்ளது என்றும், TOPO வரைபட அளவுகளுக்கும், கிரய ஆவண அளவுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லாமல் உள்ளது என்றால் சரியல்ல .

**வா.சா.1 குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur